**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ATTUR.**

**DEPOSITION OF WITNESS**

**Sessions Case No.81/2022**

**Prosecution witness 6**

**Name** : மணி
**Father's Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**(Accused 1 and 5 present. Counsel present. Accused 2 to 4 absent. For accused petition u/s 317 Cr.P.C is filed and allowed)**

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 27.10.2025.**

அரசு தரப்பில் முதல் விசாரணை:-

1) நான் பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், உமையாள்புரம் கிராமத்தில் வசித்து தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக போலீஸார் அழைத்ததின் பேரில் நான் காவல் நிலையம் சென்று அங்கு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். ஆஜர் எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்று மகஜரில் உள்ள 2வது கையெழுத்துகள் என்னுடையது தான். கையெழுத்துகள் மற்றும் முறையே அ.சா.ஆ.5 முதல் 9 ஆக குறியீடு செய்யப்படகிறது. என்னுடன் கையெழுத்து போட்டது யார் என்று தெரியாது. வழக்கை பற்றி எதுவும் தெரியாது.

சாட்சி பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) கடந்த 25.09.2023ம் தேதி மகாலட்சுமி ஐயங்கார் பேக்கரி அருகே மேற்கண்ட எதிரிகள் மிரட்டி பணம் பறித்ததாக பதியபட்ட வழக்கில் எதிரிகளை கைது செய்தபோது அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள் என்றும் அதன் அடிப்படையில் இருசக்கர வாகனம் மற்றும் பணத்தை கைப்பற்றினார்கள் என்றும் அதை நான் மற்றும் அருள் என்பவர் சாட்சி கையெழுத்து செய்துவிட்டு தற்போது எதிரிகள் தெரிந்தவர்கள் என்பதால் அவர்களை வழக்கில் இருந்து காப்பாற்றவேண்டி தற்போது அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

**வழக்கறிஞர் ஆஜர் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2025.10.27 17:44:40 +0530

**Assistant Session Judge,**
**Attur.**